செய்தி வெளியீடு எண் : 1024 நாள் : 23.07.2024

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை, மாதவரம் சூரப்பட்டில் நடைபெற்ற விழாவில் 2,124 பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாக்களை வழங்கினார்கள்.**

சென்னை, மாதவரம் சூரப்பட்டு வேலம்மாள் பொறியியல் கல்லூரியில் இன்று (23.07.2024) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் நடைபெற்ற வீட்டுமனை பட்டா வழங்கும் விழாவில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 2,124 பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாக்களை வழங்கினார்கள்.

இவ்விழா மாண்புமிகு வருவாய்த் துறை மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். ராமச்சந்திரன் அவர்கள் தலைமையில், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி அவர்கள், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி. கே. சேகர்பாபு அவர்கள் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

**இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது,**

மாதவரம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த 2 ஆயிரத்து 124 பயனாளிகளுக்கு வீட்டு மனைக்கான பட்டாக்கள் வழங்குகிற இந்த சிறப்புக்குரிய நிகழ்ச்சியில் பங்கேற்பதில் நான் மிகுந்த பெருமைப்படுகிறேன். மகிழ்ச்சி அடைகின்றேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான நம்முடைய திராவிட மாடல் அரசு உங்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை தொடர்ந்து வழங்கிக் கொண்டு இருக்கிறது. நம்முடைய அரசின் சாதனைகளை

முதலமைச்சரின் உழைப்பை அங்கீகரிக்கின்ற வகையில் சமீபத்தில் நடைபெற்ற மக்களவை தேர்தலில் 40–க்கு 40 என்ற 100 சதவீத வெற்றியை, மிகப்பெரிய வெற்றியை தமிழ்நாட்டு மக்கள் நம்முடைய அரசிற்கு அங்கீகாரமாக வழங்கினீர்கள். அதற்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான கழக அரசாக இருந்தாலும், நம்முடைய முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசாக இருந்தாலும் ஏழை, எளிய அடித்தட்டு மக்கள், நடுத்தர வர்க்க மக்களுடைய ஏற்றதிற்காக தினம், தினம் பல்வேறு திட்டங்களை வகுத்து, கொடுத்துக் கொண்டிருக்கிறது. திராவிட முன்னேற்ற கழகமும், திராவிட மாடல் அரசும், எப்போதும் உங்களுடன் நிற்கிறது. அதே போல நீங்களும் எப்பொழுதும் நம்முடைய தலைவருக்கும், நம்முடைய அரசுக்கும் பக்க பலமாக தொடர்ந்து இருந்து கொண்டு வருகிறீர்கள்.

உண்ண உணவு, உடுத்த உடை, இருக்க இடம் என்று ஒவ்வொரு மனிதனுக்கும் அடிப்படை உரிமை என்று ஐ.நா. மன்றமே சொல்லி இருக்கிறது. கலைஞருடைய ஆட்சி காலத்தில் இருந்தே உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் என்கின்ற அடிப்படைத் தேவைகளை பார்த்து, பார்த்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. குறிப்பாக, வீடு என்பது எல்லோருக்குமான ஒரு அத்தியாவசிய தேவை. அதற்காகதான் கலைஞர் அவர்கள் 1970–களிலேயே இந்தியாவில் முதன்முறையாக தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தை தொடங்கி வைத்தார்கள்.

இன்றைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் என்று மேம்படுத்தியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், எல்லோருக்கும் வீடு கிடைக்கவேண்டும் என்ற அடிப்படையில், கலைஞர் கனவு இல்லம் என்ற ஒரு திட்டத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தாண்டு அறிவித்து இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டிலேயே முதன் முதலாக கட்டட அனுமதி ஆன்லைன் மூலமாக உடனடியாக பெற வேண்டும் என்ற திட்டத்தையும் நேற்று துவக்கி வைத்திருக்கிறார்கள். வீடு எவ்வளவு முக்கியமோ, அதே அளவு, அந்த வீட்டுக்கான பட்டாவும் மிக மிக முக்கியம். அந்த வகையில் பார்த்தால் உங்கள் ஒவ்வொருவருக்கும் இந்த நாள் மிக மிக மகிழ்ச்சியான முக்கியமான ஒரு நாள். ஏனென்றால், பட்டா வேண்டும் என்பவருடைய பல வருட கனவு இன்று நினைவாகி இருக்கிறது. குறிப்பாக, சென்னையில் நான் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி, உங்களுக்கெல்லாம் ஒரு வாக்குறுதி வழங்கியிருந்தேன்.

சென்னையில் பட்டா பிரச்சினை பல வருஷமா இருக்கிறது. அப்படி பட்டா கிடைக்காமல் இருப்பவர்களுக்கு நிச்சயம் தேர்தல் முடிந்தவுடன் பட்டா வழங்கப்படும் என்ற அந்த வாக்குறுதியை நான் அளித்திருந்தேன். தேர்தல் முடிவுகள் முடிந்து 2 மாதம் தான் ஆகியிருக்கிறது. இந்த 2 மாதத்திற்குள் முதலமைச்சர் அவர்கள், உங்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றி இருக்கிறார். நம்முடைய திராவிட மாடல் அரசு, பல வருடங்களாக பட்டா இல்லாமல் இருந்தவர்களுக்கு கூட இன்றைக்கு பட்டா வழங்கியுள்ளது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், CMDA, ஒருமுறை வரன்முறை செய்யப்பட்ட திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பட்டாக்களுக்கு கணினி பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. நத்தம் செட்டில்மெண்ட்–டவுன் செட்டில்மென்ட் 2018–க்கு பிறகு சென்னை வருவாய் மாவட்டத்தோடு இணைந்த பகுதிகளில் உள்ள வீட்டு மனைகளுக்கு பட்டா வழங்கப்படுகிறது, சர்க்கார் நஞ்சை, புஞ்சை என்று பல பிரச்சனைகள் இருந்து வந்தது. ஆனால், இந்த பிரச்சனைகள் எல்லாம் முதலமைச்சர் அவர்களின் கவனத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது எத்தனை சிக்கல்கள் இருந்தாலும் சரி, மக்களுடைய மகிழ்ச்சி தான் முக்கியம் என்று ஒரே குறிக்கோளோடு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பட்டா வழங்க அறிவுறுத்தினார்கள்.

ஏனென்றால், உங்கள் வீட்டுக்கான பட்டா என்பது உங்கள் ஒவ்வொருடைய உரிமை. அதனால்தான், இந்த பிரச்சனைகளை தீர்த்து வைப்பதற்கான பரிந்துரைகளை வழங்க, ஒரு குழுவை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நியமித்தார்கள். உடனே எந்த பகுதியில் என்ன பிரச்சனை இருக்கிறது அதை எப்படி தீர்க்கவேண்டும் என்ற பரிந்துரைகளை தயார் செய்து சம்பந்தப்பட் துறை தலைவர்கள், மாவட்ட ஆட்சியர்களுக்கு அந்தக் குழு அளித்தது. அதன் காரணமாக இன்றைக்கு 28 ஆயிரத்து 848 பயனாளிகளுக்கு பட்டாக்கள் வழங்க தயார் நிலையில் இருக்கிறது.

குறிப்பாக இன்றைக்கு மாதவரம் மற்றும் அருகாமையில் உள்ள தொகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு 2,124 பட்டாக்களும், நாளை நடைபெறவிருக்கும் சோழிங்கநல்லூர் நிகழ்ச்சியில் 1,984 பட்டாக்களும் வழங்க இருக்கிறோம். இதை தொடர்ந்து சென்னையில் உள்ள சட்டமன்றத் தொகுதிகளில், அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாக பட்டாக்கள் வழங்கப்பட இருக்கிறது.

நம்முடைய திராவிட மாடல் அரசின் முயற்சியால் இன்றைக்கு உங்களுடைய ஒவ்வொருடைய கையிலும், வீட்டு மனை பட்டாக்கள் வழங்கப்பட இருக்கிறது. நம்முடைய திராவிட மாடல் அரசு, இன்றைக்கு இருக்கிற மக்களுக்கு மட்டுமில்ல, தமிழ்நாட்டின் எதிர்கால சந்ததிக்கும் சேர்த்து சிந்திக்குது என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்லுவார்கள். அதற்கு ஓர் உதாரணம் தான் இன்றைக்கு நடைபெறுகின்ற இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இவ்வளவு நாள் சொந்த வீடாக இருந்தாலும், பட்டா இல்லையே என்று ஒரு தயக்கமும் – கலக்கமும் இருந்திருக்கும். இனி அந்த பிரச்சினை உங்களுக்கு எதுவும் கிடையாது. உங்கள் வீட்டில் நீங்கள் நிம்மதியாக, மகிழ்ச்சியாக தூங்கலாம். ஏனென்றால், இன்றிலிருந்து உங்கள் வீட்டுமனை, வீடு சட்டப்பூர்வமாக சொந்தமாகி உள்ளது.

நம்முடைய திராவிட மாடல் அரசு இது மட்டுமல்லாமல், எண்ணற்றத் திட்டங்களை செயல்படுத்திட்டு இருக்கிறது. மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து விடியல் பயணத்திட்டம் மூலமாக கிட்டத்தட்ட 500 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள்.

மகளிரின் சுமையை குறைக்கின்ற வகையில், முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிமுகம் செய்தார்கள். இந்த திட்டத்தை இன்றைக்கு பல வெளி மாநிலங்கள் மட்டுமில்லை. கனடா, இலங்கை போன்ற வெளி நாடுகளும் நம்முடைய திராவிட மாடல் அரசு திட்டத்தை பின்பற்றி வருகிறார்கள்.

இதன் மூலமாக இன்றைக்கு கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் 20 லட்சம் மாணவர்களுக்கு பள்ளிகளிலேயே முதலமைச்சரின் காலலை உணவுத் திட்டம் வழங்கப்படுகிறது. புதுமைப்பெண் திட்டம் மூலமாக அரசுப்பள்ளியில படித்து உயர்கல்வி படிக்கின்ற 3 இலட்சத்து 25 ஆயிரம் மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகின்றது.

இவை எல்லாவற்றையும் விட மிக மிக முக்கியமானத் திட்டம் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம். இந்த திட்டம், பெண்கள் மத்தியில மிகப்பெரிய ஒரு வரவேற்பை பெற்றிருக்கின்றது. கிட்டத்தட்ட ஒரு கோடியே 16 லட்சம் மகளிர் கடந்த 11 மாதங்களாக மாதம் 1000 ரூபாய் கலைஞர் உரிமைத் தொகை திட்டம் மூலமாக பயன்பெற்று வருகிறார்கள்.

இதுபோல, நம்முடைய அரசு தமிழ்நாட்டையும், தமிழ்நாட்டு மக்களின் வளர்ச்சியையும் அடுத்த கட்டத்திற்கு எடுத்துக்கொண்டு போகின்ற வகையில் செயல்படுத்திக்கொண்டு இருக்கிறது. இந்த திட்டங்களை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தியிருக்கின்ற காரணத்தால் தமிழ்நாடு அரசு இன்றைக்கு வறுமை ஒழிப்பு – மகளிர் முன்னேற்றம், தரமான கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட 13 துறைகளில் இந்தியாவிலேயே நம்பர் 1 மாநிலமாக நம்முடைய தமிழ்நாடு வந்திருக்கிறது.

இதை நான் சொல்லவில்லை, ஒன்றிய அரசின் நிதி ஆயோக் அமைப்பே புள்ளி விவரத்துடன் தெரிவித்திருக்கிறது.

நம்முடைய திராவிட மாடல் அரசின் சாதனைகளில் ஒன்றாகதான் உங்களுக்கு எல்லாம் இன்றைக்கு வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டிருக்கிறது.

நீங்கள் அனைவரும் கழக அரசின் திட்டங்களுடைய பயனாளிகள் மட்டுமில்லை. நீங்கள் எல்லாருமே இந்த திட்டங்களின் பங்கேற்பாளர்கள்.

திராவிட மாடல் அரசின் சாதனை திட்டங்களை எல்லாம் நீங்கள் அனைவருக்கும் எடுத்துச் செல்லவேண்டும். இந்த அரசின் பிராண்ட் தூதராக நீங்கள் திகழவேண்டும்.

தொடர்ந்து உங்களுக்கும், உங்களுடைய அடுத்தடுத்த தலைமுறைகளுக்காகவும் உழைக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். எங்களை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

இந்தப் பட்டாக்களை தயார் செய்ய இரவு பகல் பார்க்காமல் உழைத்துக் கொண்டிருக்கும் அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் செயலாளர் திரு.டாரேஸ் அகமது ஐ.ஏ.எஸ் அவர்கள், பட்டா வழங்குவதில் உள்ள சிக்கல்களை தீர்ப்பதற்காக அமைக்கப்பட்ட குழு மற்றும் அக்குழுவின் சிறப்பு அதிகாரி திரு.மதுசூதன் ரெட்டி ஐ.ஏ.எஸ் அவர்கள், சென்னை மாவட்ட ஆட்சியர் மற்றும் அதிகாரிகள், அலுவலர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியையும், பாராட்டுக்களையும், வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வீட்டுமனைப்பட்டா பெற்ற அத்தனைப் பேருக்கும் மீண்டும் என்னுடைய அன்பையும், வாழ்த்தையும் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ்.சுதர்சனம், திரு.ப.சிவகுமார் (எ) தாயகம் கவி, திரு.ஆர்.டி.சேகர், மருத்துவர் நா.எழிலன், திரு.த.வேலு, திரு.கா.கணபதி, திரு.ஜோசப் சாமுவேல், திரு.ஐட்ரீம் இரா.மூர்த்தி, திரு.அ.வெற்றி அழகன், திரு.கே.பி.சங்கர், திரு.எபினேசர் ஜே.ஜே (எ) ஜான் எபினேசர் ஜெ, திரு.ஏ.எம்.வி.பிரபாகரராஜா, மாநகராட்சி துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் தலைவர் திரு.பூச்சி எஸ்.முருகன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, இ.ஆ.ப., வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அரசு செயலாளர் மருத்துவர் தாரேஸ் அகமது, இ.ஆ.ப., நில நிர்வாக ஆணையர் டாக்டர்.கே.எஸ்.பழனிச்சாமி, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப, நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் திரு.பி.மதுசூதன் ரெட்டி, இ.ஆ.ப, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கீ.சு.சமீரன், இ.ஆ.ப., மண்டலக் குழு தலைவர் திரு.எஸ்.நந்தகோபால் மற்றும் பொதுமக்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu